3-10 p.m. **Sri K. S. LAKSHMIPATHI NAICKER** :—"கனம் சபாநாயகர் அவர்களே இங்கு விவசாய மானியத்தை நாம் விவாதித்துக்கொண்டிருக்கிறோம். விவசாயம் நமது நாட்டின் மிகவும் முக்கியமானத் தொழில் என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம். அதை முன்னுக்குக்கொண்டுவருவதற்கு முயல வேண்டும். இப்பொழுது பற்றுக்குறையாக இருக்கக்கூடிய உணவுத் தானியங்களை அதிகப்படுத்துவதற்கு, நல்ல திட்டங்களைக் கொண்டு விவசாயத்தை முன்னுக்குக் கொண்டு வருவதால் நமது உணவுப் பொருள்களை அதிகப்படுத்திக்கொள்ள முடியும். இதற்கு நல்ல திட்டங்கள் செய்து நவீன முறைகளில் விவசாயத்தைப் பெருக்கும் முறைகளை கிராம மக்களுக்கு எடுத்துக்கூறி அவர்களை அந்த முறைகளை கையாளும்படி செய்யவேண்டும்.

"இப்போது இருக்கக்கூடிய நிலைமையிலே விவசாயிகள் தாங்களாகவே தங்களுக்கு வேண்டிய பரிகாரங்களை சர்க்காரின் மூலமாக பெறுவதற்கு முன்வந்து விட்டார்கள். விவசாய டிபார்ட்டுமெண்டு பொறுக்கு விதைகளைக் கொடுத்து வருகிறார்கள். அதை நாம் பாராட்ட வேண்டியிருக்கிறது. ஆனால் அவைகளை காலாகாலத்தில் விவசாயிக்குக் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்படுவதில்லை. தாலூகாவில் டெமான்ஸ்ட்ரேட்டரிடம் விதைகள் போதுமான அளவு இருந்தாலும் விலைகள் போட்டுவரவில்லை என்று

24th December 1953] [Sri K. S. Lakshmipathi Naicker]

காலம் கடத்தப்படுகிறது. இவைகளை விவசாயிகளுக்கு சரியான நேரத்தில் கிடைக்கும்படியாக செய்யவேண்டும். இதற்கு அந்தப் பருவக்காலங்களில் மழைபெய்யும்போது என்ன விதைகள் அந்த பிராந்தியத்தில் விதைக்கப் படுகிறது என்று தெரிந்து இப்போது இருக்கக்கூடிய அக்கிரிகல்சர் டெமான் ஸ்ட்ரேட்டர் ஆபீஸில் சேகரித்து வைக்க வேண்டும். விவசாயி களுக்கு அவ்வப்போது என்னென்ன தேவையிருக்கு மென்பதை முன்னெச்சரிக்கையாக விலைபோடபட்டு மழைபெய்த மறுதினமே கிடைக்க ஏற்பாடு செய்யப்படவில்லை. அக்கிரிகல்சர் ஆபீஸில் போய்க்கேட் டால் இன்னும் விலைவாசிகள் வரவில்லை, விதை வித்துக்கள் வரவில்லை என்று சாக்குப்போக்குச் சொல்லி வீண் காலம் கடத்தப்படுவதால் விவ சாயிகள் அப்பொழுது நிலத்திலுள்ள ஈரத்தையும் காலத்தையும் பயன் படுத்திக்கொள்ள முடியாது போகிறது. ஆகையால் அந்தந்த பருவ காலங்களில் என்ன வித்துக்கள் தேவையோ, அவை உடனடியாக அவர்கள் கையில் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

"உணவுப்பொருள்களை அதிகப்படியாக பெருக்குவதற்கு பிரசாரம் செய்யப்படுகிறது. ஆனால், அதற்குப் போதுமான வசதி அளிப்பதில்லை. மானுவாரி நிலங்களிலுள்ள விவசாயிகளிடத்தில் உணவுப்பொருள்களை உற்பத்தி பண்ணவேண்டுமென்று சொன்னால் அவர்களுக்கு சரியான மழை இல்லை; காலா காலத்தில் விதைவித்துக்கள் கிடைப்பதில்லை. இதுபோன்ற உதவிகளை விவசாயிக்கு கிடைக்கச்செய்யவில்லை. நீர்ப்பாசன வசதிகள் இல்லாத இடங்களில், நீர்ப்பாசன வசதியோ அல்லது கிணறு வெட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளோ, அல்லது கிணறுகள் இருக்கும் இடத்தில் மின்சார வசதியோ செய்துகொடுக்காமல் உணவுப்பொருள்களை உற்பத்தி செய்து கொடுக்கச்சொல்வது வீண் பிரசாரமேதவிர பலனளிக்காது. ஒவ் வொன்றும் பிரசாரமாகத் தான் இருக்கிறது.

"நவீன விவசாய முறைகளைப்பற்றி கிராம மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். அக்கிரிகல்சரல் டெமான்ஸ்ட்ரேட்டர் மூலமாக அவர்களுக்கு எடுத்துரைக்கப்படவேண்டும். கண்காட்சிகள் மூலமாகவும், சினிமா மூல மாகவும் விவசாய முறைகளை எப்படிக்கையாள்வது என்பது பற்றி கிராமப் புறங்களிலே காட்டவேண்டும். அவர்கள் நேரடியாகப் பார்த்து ஒவ்வொரு வேலைகளையும் தெரிந்துகொள்ளுவதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்படவேண் டும். விவசாயிகள் நேரில் பார்த்து தெரிந்துகொள்ளும் அளவு பிரசாரத் தில் தெரிந்துகொள்ள முடியாது என்று குறிப்பிடுகிறேன்.

"கோயம்புத்தூரிலுள்ள விவசாயத்திற்கும் மற்ற ஜில்லாவிலுள்ள விவசாயத்திற்கும் ஏராளமான வித்தியாசங்கள் இருக்கின்றன. கோயம் புத்தூரில் சர்க்கார் பண்ணை இருக்கிறது. ஆதலால் நேரில் பார்த்து தெரிந் துகொள்ள முடிகிறது. வெறும் பிரசாரத்தினால் பிரயோஜனமில்லை. மக் கள் நேரடியாகப் பார்த்து தெரிந்துகொள்வதற்காக வேண்டிய உதவியைச் செய்யவேண்டும். ஏராளமான பணத்தை வெறும் பிரசாரத்தில் செலவு செய்து பயன் இல்லை. உண்மையாகச் சொல்லுகிறேன், சில கிராமங் களுக்கு மின்சார வசதிகள் இன்னும் கொடுக்கப்படாமலேயே இருக்கிறது.

"கால் நடைகள் விவசாயிகளுக்கு மிகவும் முக்கியமானது. இவை களுக்கான வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும். ஏரிகளிலும், குளங் களிலும் தண்ணீர் மட்டம் மிகவும் கீழாக இருப்பதனால் அதிக ஆழமுள்ள கிணறுகள் வெட்டப்படுகிறது. ஆழமான கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைப்பதற்காக நல்ல விலையுயர்ந்த மாடுகள் வாங்க வேண்டியிருக்கிறது. ரூ. 1,000 அல்லது 1,500 விலை கொடுத்து ஒரு ஜோடி மாடுகளை வாங்க வேண்டிய நிலைமையில் விவசாயிகள் இருக்கிறார்கள். இவர்கள் இதைவாங்கு வதற்குப் பணமில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகையால் விவ சாயிகளுக்கு மின்சார வசதி கிடைக்கவேண்டும். மின்சார வசதி இவர் களுக்குக் கொடுக்கப்பட்டால் அதிக உழைப்பின்றி குறைந்த செலவில் காரியங்களை ஆற்றமுடியும்.

"மின்சார வசதியில்லாத கிராமங்களில் ஆழமான கிணறுகள் இருக் கக்கூடிய இடங்களிலே நீர்ப்பாசன வசதி செய்துகொடுக்க பம்பு செட்டுகள் வாங்குவதற்கு சர்க்கார் கடன் கொடுத்து உதவ வேண்டும். 3-20 p.m.

[Sri K. S. Lakshmipathi Naicker] [24th December 1953

"மதுரை ஜில்லாவிலே வைகையாற்றின் கரை ஓரமாகப் பம்பு செட்டுகள் வைப்பதற்காக பிலிட்டர் பாயின்ட் என்பது போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. வசதியுள்ள எல்லா இடங்களிலும் இதைபோன்ற உணவு உற்பத்தி செய்வதற்காக இவ்வித வசதிகளை விஸ்தரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

"சேலம் ஜில்லாவில் ஜேடர்பாளையம் அணைக்கட்டு கட்டப்பட்டு அதிலிருந்து விவசாயிகளுக்கு தண்ணீர் சப்ளை செய்ய உடனடியான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது. இதனால் 500 ஏக்கர் நீர்ப்பாசன வசதி கிடைக்குமென்று உத்தேசித்து ஒரு அணைகட்டி செட்டுகள் வைக்க அனுமதிக்கப்பட்டு வந்ததை இப்பொழுது தடை செய்து இடைஞ்சல் செய்வதால் விவசாயம் எப்படிப் பெருகும்? உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக செய்துகொடுக்கப்பட்ட வசதிகளை இப்பொழுது குறைத்துவிட்டால் விவசாயம் எப்படி பெருகும்? உணவு உற்பத்தி பெருக்கப்படுவதற்காக மராமத்து இலாகாவிலுள்ள நீர்ப்பாசனங்களில் கெடுதி இருக்கிறதென்று ஆக்ஷேபனை செய்தால் உடனே ஏற்கெனவே உள்ள பம்பு செட்டுகளை எடுத்து எறிந்துவிடவேண்டுமென்று உத்தரவு பிரப்பித்து இந்த மாதிரியாக ஏதாவது தடைகள் செய்து குறுக்குப் பிரசாரங்கள் செய்கிறார்கள். இப்படியெல்லாம் ஒரு திட்டத்தை வேலை செய்யவிடாது குறுக்கிடுவதாலும் விவசாயத்திற்கு போறுமான தண்ணீர் வசதிகளும் செய்யாமலும் இருப்பதால் எப்படி உற்பத்தி பெறுக்க முடியும்.

"அடுத்தாற்போல் உரம் எப்படி கொடுக்கப்படுகிறது என்பதைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். உரம் பெரிய விவசாயிகளைத்தவிர ஏழை விவசாயிகளுக்கும் கொடுக்கப்பட்டால்தான் விவசாயிகள் அவ்வப்போது தேவைப்படும் உரத்தை வாங்கி உபயோகிக்க முடியும். அமோனியம் சல்பேட் எல்லோருக்கும் கிடைக்கும்படியாகச் செய்யவேண்டும். விவசாயிகளுக்கு பயிர்களுக்கு எப்படி உரங்களை உபயோகப்படுத்துவது என்பதைப் பற்றி அகிரிகல்சர் டிபார்ட்மெண்ட் அதிகாரிகள் அவர்களிடத்தில் போய் கற்பிக்க வேண்டுமென்று சொல்லுகிறேன். அப்பொழுது தான் விவசாயிகள் நல்ல முறையிலே பயிர்த்தொழிலைச் செய்வதற்கும் எப்படி உரத்தைப் பயன்படுத்திக் கொள்வது என்பதைப் பற்றியும் தெரிந்துகொள்ள முடியும். இது பற்றி விவசாய இலாகா வேலை செய்து கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன். உரத்தை வியாபாரிகளுக்குக் கொடுக்காமல் விவசாய இலாகாவே விநியோகிப்பது நலம் என்று நினைக்கிறேன். ஏனென்றால் தனிப்பட்ட வியாபாரி லாபத்தைக் கருதி உரத்துடன் மண்ணையும் மணலையும் கலந்து விற்கிறான். மேலும் ஒரு நிலத்திற்கு எவ்வளவு உரம்போட வேண்டும், எந்தப் பயிருக்கு என்ன உரம் போட வேண்டும் என்பதை எல்லாம் வியாபாரியால் விவசாயிக்கு எடுத்துச்சொல்ல இயலாது. ஆகையால் அவைகள் இலாக்காவிலுள்ள டெமான்ஸ்ட்ரேட்டரின் மூலமாக விவசாயிகளுக்கு எருவின் அளவு என்ன, உரம் எப்போது போடப்படவேண்டும் என்பதைப்பற்றி விவசாயி தெரிந்துகொள்ளத் துண்டு பிரசுரத்தின் மூலமாவது புத்தக மூலமாவது தெரியப்படுத்த வேண்டும். இதுபோன்ற படிப்பினைகளை விவசாயி தெரிந்துகொள்ள வேண்டியிருப்பதால் இலாக்காவே உரங்களை விநியோகிக்க வேண்டும்.

"புல்டோஸர் என்ஜின்களை ஒரு ஜில்லாவில், ஒரு தாலூகாவிலிருந்து மற்றொரு தாலூகாவிற்கு போகச் சொல்வதால் ஏற்படும் செலவுகளை நேரடியாக விவசாயிகளிடமிருந்து வசூலிப்பதைநிறுத்தி சர்க்காரே மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"டிராக்டருக்கு வாடகை ஒரு மணிக்கு ரூ. 5 லிருந்து ரூ. 10 ஆக்கப்பட்டது. இதன் நோக்கம் என்னவென்று தெரியவில்லை. அதிக விவசாயிகள் இதை உபயோகிப்பதை தடுப்பதற்காகவா. என்று கேட்கிறேன். இப்போது குறிப்பிட்ட முக்கியமான விஷயங்களைக் கருத்திலே வைத்து நடந்துகொள்ளவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

3-25 p.m. SRI K. R. VISWANATHAN :—"கனம் அவைத்தலைவர் அவர்களே, இந்த விவசாய மானியக்கோரிக்கையின் கீழ் கொண்டுவரப்பட்டி

24th December 1953] [Sri K. R. Viswanathan]

ருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முதலாவது, விவசாயத்தை அபிவிருத்திசெய்வதற்குமுக்கிய மானவர்கள் விவசாயிகளே ஆவார்கள். ஆகையால் முதலில் அவர்களின் நிலைமையை அபிவிருத்தி செய்துகொண்டால், விவசாயம் அபிவிருத்தி யாகும். ஆனால் இன்று விவசாயிகள் எந்த நிலையில் இருக்கிறார்கள் ? கடன் காரர்களாக இருக்கிறார்கள். இந்த கடன் பயம் நீங்குவதற்கு சர்க் கார் ஒரு அவரச சட்டம் கொண்டு வந்தது. அதனால் பெரிய பணக்காரர் களுக்கோ, மிராசுதாரர்களுக்கோ கொடுக்க வேண்டிய கடனை உடனடியாக கொடுக்க வேண்டியதில்லை. ஆனால் சர்க்காருக்கு கொடுக்க வேண்டிய கடன்களை உடனடியாக கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அப்படி இருக்கிறவரை, இப்போது இருக்கின்ற விவசாயிகளின் கடன் சுமை எந்த விதத்திலும் தீருவதற்கு வழியில்லை. உதாரணமாக, எங்கள் தாலூகா விலே கிணறு மானியத்திற்காக கடன் வாங்கி இருந்தார்கள். உடையார் பாளையம், பெரம்பலூர் போன்ற தாலூக்காக்களை பஞ்சத்தால் பாதிக்கப் பட்டிருந்தன. போன ஆண்டின் கடனான்து வசூலிக்கப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. இப்போது அந்த கடனை உடனடியாக வசூலித்தே தீரவேண்டுமென்ற நிர்ப்பந்தத்தினால் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டி ருக்கிறார்கள். சில இடங்களில் ஜப்தியும் நடந்து வருகிறது. இதனால் இப்பொழுது தங்களிடம் ஓரளவு உணவுக்காகவும், விதைக்காகவும் சேர்த்து வைத்துள்ள உணவுப் பொருள்களை விற்றுக் கொடுத்துவிட்டு, உண்ணு வதற்கு உணவு இன்றி பட்டினியால் கஷ்டப்படுகின்றனர். ஆகையால் இந்த நெருக்கடியை சமாளிக்க சர்க்கார் மற்ற கடன்களை ஒத்தி வைத்திருப்பது போல் இதையும் ஒத்தி வைக்க வேண்டுமென்று முதலாவதாக எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன்.

" அடுத்தப்படியாக, மழையை நம்பியிருக்கும் மானாவாரி நிலங்கள் பல இடங்களில் இருக்கின்றன. குறிப்பாக திருச்சி ஜில்லாவிலே, உடை யார்பாளையம், பெரம்பலூர் தாலூக்காக்களிலே தண்ணீர் வசதியே கிடையாது. நீர்ப்பாசன வசதி மிகுதியும் கிடையாது. இம்மாதிரி இருக்கிற இடங்களுக்கு தண்ணீர் வசதி செய்து கொடுப்பது சர்க்காரின் கடமை என்பது அவர் களுக்கு சொல்லாமலே தெரியும். ஆற்றின் படுகைப் பிரதேசங்களில் ' பில்டர் பாயின்ட் ' வைத்துக் கொடுப்பது போல் இந்த தாலூகாக்களி லும் ஆற்றோரங்களில் வைத்துக்கொடுக்க வேண்டும். சில மிராசுதாரர் கள் 400, 500 செலவு செய்ய முன் வருகிறார்கள். இம்மாதிரி விஞ்ஞான ரீதியாக ' பில்டர் பாயின்ட் ' இறக்குவது அநேக விவசாயிகளுக்கு தெரியாது. சில இடங்களில் 60 அடி, 100 அடி தோண்டியும்கூட தண்ணீர் கிடைப்பதில்லை. அப்படி செலவழித்து பயன்படாது போனால் என்ன செய்வ தென்று மிகவும் பயந்து கடன் வாங்கி செலவழிக்க ஏழை விவசாயிகள் பயப்படுகின்றனர். ஆகையால் இத்தகைய நீர் வசதியற்ற பிரதேசங்களில் சர்க்கார் முன்வந்து பரிசீலனை செய்து, கிணறுகளோ, பில்டர் பாயின்டு களோ ஏற்படுத்திக் கொடுத்து ஊக்கம் காட்டவேண்டும். இந்த யோசனை யை ஜில்லா உணவுக் கமிட்டிக்கு சொன்னேன். அவர்கள் சொன்னார்கள், இது விஷயத்தில் சர்க்காராக ஒன்று செய்ய மாட்டோம். விவசாயிகளே செய்துகொள்ள முன்வர வேண்டுமென்றார்கள். விவசாயிகள் மிகவும் ஏழைகள். சர்க்காரே முன்வந்து ஒரு சில இடத்தில் பில்டர் பாயின்டோ, இயந்திரங்களையோ கொண்டு தண்ணீர் வசதியை ஆங்காங்கே ஏற்படுத்தும் விஷயத்தில் வெற்றிகண்டு அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டினால் அவர்கள் பின்பற்றி அம்முயற்சியில் முன் வர வழி ஏற்படும் என்று தெரிவித்து கொள்ளுகிறேன். ஆகையால் நீர்வளம் அற்ற இடங்களில் அரசியலாரே ' பில்டர் பாய்ன்ட் ' குழாய் கிணறுகள் இவைகளை இறக்கி வெற்றி காட்டி விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்க வேண்டுகின்றேன்.

" அடுத்தபடியாக, இப்போது மத்திய சர்க்காரலே (exploratory wells) ' கண்டுபிடிப்பு கிணறுகளை ' மூலம் தண்ணீர் வசதி செய்துகொடுக்கும் திட்டமொன்று கொண்டுவந்திருப்பதாக அறிகிறேன். அதனால் அதிக நீர்ப்பாங்கற்ற இடங்களில் தண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியுமென்று அறிகிறேன். ஆகையால் அத்திட்டத்தின் கீழ் உடையார்

[Sri K. R. Viswanathan] [24th December 1953

பாளையம் தாலூகாவில் கண்டுபிடிப்பு கிணறுகள் (Exploratory Wells) அமைக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

"ஆங்காங்கு பல பழைய ஏரிகள் பாழடைந்து வருகின்றன. குறிப்பாக என்னுடைய தாலூகாவிலே பொன்னேரி என்று ஒரு ஏரி இருக்கிறது. இதனால் சுமார் 1,000 ஏக்கர் நிலங்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. அதன் ஆயக்கட்டை விஸ்தரிக்க வேண்டும். விஸ்தரிப்பதால் இன்னும் பல ஏக்கர் நிலங்கள் அதிகமாக பயிருக்கு கொண்டு வர முடியுமென்றைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அது மட்டும் அல்லாமல் புதுக்குடி என்ற ஒரு ஏரி இருக்கிறது. ஐந்து மைல்நீளம், 3 மைல் அகலம் உள்ளது. முன்னொரு கால் இது பாசன ஏரியாக இருந்தது என்பதற்கு வேண்டிய சின்னங்களும், அடையாளங்களும் இருந்து கொண்டு வருகின்றன. இது பற்றி இரண்டு ஆண்டுகளுக்கு முன் சர்க்காருக்கு அறிவித்தேன். எஞ்சினியர்கள் வந்து பார்வையிட்டுவிட்டுப் போனார்களே தவிர இதுவரை அதற்கு மேல் ஒரு நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே, அந்த புதுக்குடி ஏரியை அதிகாரிகள் கவனித்து, அதை நீர்ப்பாசனத்திற்கு உபயோகப்படும்படி செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

"உடையார்பாளையம் தாலூகாவில் உள்ள செந்துரை ஓடைக்கு ஒரு அணையும், குமூரூர் ஏரிக்கு ஒரு வரத்து வாய்க்காலும் கட்டினால் 300, 350 ஏக்கர் நிலம் அதிகப்படியாக பயிரிடலாம் என்று பரிசீலனை செய்து ஒரு எஸ்டிமேட் தயாரித்திருக்கிறார்கள். எஸ்டிமேட்டும் சர்க்காருக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அந்தத் திட்டத்தை சர்க்கார் உடனடியாக அங்கீகரித்து மேற்கொண்டு அதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"சில ஏழை விவசாயிகளான ஆதிதிராவிடர்கள் மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் சில காலி இடங்களில் பல ஆண்டுகளாக பயிரிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவற்றை அடமானம் செய்துகொள்ள வேண்டுமென்றால், அவை காட்டிலாக்காவைச் சேர்ந்ததென்றும், மேட்டூர் கெனால் புராஜக்டை சேர்ந்ததென்றும் சொல்லப்படுகிறது. எந்த மாதிரியாக இருந்தாலும் சரி, இந்நிலங்கள் இவ்விரண்டுக்கும் உபயோகப்படக் கூடியதாக இல்லை. அவற்றை அடைய சர்காரின் விதி தடை செய்கிறது. ஆகவே அதற்கு விதிவிலக்களித்து இப்பொழுது பயிரிட்டுக் கொண்டு வருகின்ற பகுதிகளை அவர்களுக்கு ஒதுக்கி, பட்டா செய்து கொடுக்க வேண்டும். அடமானம் செய்து கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

"உதாரணமாக ஜெயங்கொண்டபுரம் தொகுதியைச் சார்ந்த குருவாடி போன்ற இடங்களில் பத்து வருஷங்களாக சில ஆதிதிராவிடர்கள் 20 ஏக்கர் நிலத்தில் பயிரிட்டுக் கொண்டு வருகின்றனர். இந்த இடத்தை அடமானம் செய்து கொள்ளலாமென்றால், அது மேட்டூர் கால்வாய் புராஜெக்ட்டை சேர்ந்தது என்றும், செய்வதற்கு முடியாது என்றும் சொல்லுகிறார்கள். ஆகையால் இதையெல்லாம் கவனித்து இதற்கான நடவடிக்கைகள் எடுக்கும்படி சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்."

3-35 p.m. *SRI P. VENKATESHA SHOLAGAR :—"கனம் சபாநாயகர் அவர்களே, இந்நாட்டின் ஜனத்தொகையில் பெரும்பகுதியான மக்கள் அதாவது 80 சத விகிதம் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இத்தகைய பெரும் பகுதி மக்கள் செய்யும் தொழில் மிகவும் உயர்ந்த நிலையில் வளர்ச்சி பெற்றுள்ளதா என்றால் இல்லை, அவர்களுக்கு உள்ள வருமை, கடன்தொல்லை, வாரக் குறைவு, அதிகக் குத்தகை, கூலி குறைவு இவைகள் தான் இதற்கு காரணம் என்பதை நான் ரொம்பவும் வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியதாக இருக்கிறது. இப்பொழுது விவசாயிகள் எல்லோரும் கடன்பட்டு கடன் தொல்லையால் பீடிக்கப்பட்டு சாகுபடி செய்வதற்கு முடியாமல் இருக்கும் நிலையில் ஏதோ ஒரு கடன் சட்டம் வந்திருக்கிறது. அதில் சில குறைபாடுகள் இருந்தா

24th December 1953] [Sri P. Venkatesha Sholagar]

லும் அதை திருத்தி ஒழுங்கான முறையில் அமைத்தால் விவசாயிகளுக்கு ஓரளவு சௌகர்யம் செய்ததாகும். இன்னும் நாட்டில் விவசாயிகள் மிகவும் பிற்போக்கான நிலையில்தான் இருக்கிறார்கள். இன்றைய தினம் நாம் உபயோகிக்கும் கலப்பைகள் மற்ற நாடுகளிலெல்லாம் கண்காட்சியில்தான் வைக்கப்பட்டிருக்கிறது. நம் நாடில் இன்னும் நூதன கலப்பைகளை விவசாயிகள் உபயோகிக்க முடியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு அவைகளை உபயோகிக்கும் வழியை தெரியப்படுத்தாமல் இருப்பதால்தான் அவர்களால் அவைகளை உபயோகப்படுத்த முடியவில்லை. ஆனால் மற்ற நாடுகள் நூதன யந்திரங்களை உபயோகிக்க தெரிந்து கொண்டு அதிக முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். அத்துடன் நம் நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு நிலத்திற்கு எப்படி உரம் போடுவது, எப்படி நாற்று நடுவது என்றெல்லாம் தெரியாமல் ஏதோ நடுகிறோம், பயிர் கிளம்புகிறது, பலித்தால் பலிப்பது இல்லாவிட்டால் குப்புற விழுவது என்று இவ்வித நிலைமையில் அவர்கள் விவசாயம் செய்துகொண்டுவருகிறார்கள். ஆகவே விவசாயிகளுக்கு விவசாயத்தை எவ்விதம் லாபகரமான முறையில் நடத்த வேண்டும் என்பதை எழுதிவைத்து, அதை அவர்களுக்கு தெரியப்படுத்தி விவசாயம் செய்யச் சொல்ல வேண்டும். நூதன முறைகளைப் பற்றி டிமான்ஸ்ரேட்ரின் பிரசாரம் மட்டும் போதாது. சீமை உரம் போட்டால் அதிகமாக வெள்ளாமை காணும். அதிகமான உரம் போட்டால் நன்றாக விளையும் என்று சொல்லி விட்டால் போதாது. இப்பொழுது சீமை உரம் போட்டால், சல்பேட் போட்டால், அது இயற்கைக்கு விரோதமாக இருக்கும். அதனால் பூமி கெட்டுப்போய்விடும் என்று விவசாயிகள் கருதுகிறார்கள். அதன் காரணமாக அவர்கள் பயந்து கொண்டு சீமை உரத்தை சரிவர உபயோகிப்பது இல்லை. சீமை உரம் போட்டால் அது வெள்ளாமைக்கு நலமாய் இருந்தாலும் அவர்கள் அதை உபயோகிக்காமல் பயந்துவிடுகிறார்கள். சில இடங்களில் இந்த சீமை உரத்தை மெலிந்த பயிரில் போட்டால் அது அதிகமாய் வளர்ந்து வளர்ச்சி தாங்காமல் விழுந்துவிடுகிறது. அதோடு சூப்பர் பாஸ்பேட் போடவேண்டுமென்பது அவர்களுக்கு தெரிவது இல்லை. அவைகளை உபயோகிக்கும் முறையை விவசாயிகளுக்கு சரியாய் கற்றுக்கொடுத்தால் அவர்கள் சுலபமாக பயிர் செய்வார்கள். பிறகு அதைப் பின்பற்றி யாவரும் நல்ல முறையில் விவசாயம் செய்வதற்கு சாதகமாக இருக்கும். அவர்களிடத்தில் இப்பொழுது ஒரு பயம் இருக்கிறது. அதாவது சீமை உரத்தையாவது, சல்பேட்டையாவது ஒரு வருஷம் போட்டால் அடுத்த வருஷம் அந்த பூமி கெட்டுப்போய்விடுமோ என்ற பயம் விவசாயிகளுக்கு இருந்துவருகிறது. ஆகவே சீமை உரத்தை அதிகமாக உபயோகப்படுத்தினால் நன்றாக விளையும் என்ற அனுபவத்தை அவர்கள் தெரிந்து கொள்வதற்கு சர்க்கார் முயற்சி செய்ய வேண்டும்.

"அதோடு வள்ளுவர் சொன்ன பாட்டை உழவர்கள் புரிந்துகொள்ள நல்ல முயற்சி எடுக்கவேண்டியது மிகவும் அவசியம்.

'ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு'

என்று சொல்லி இருப்பது போல் சீறாக உழுது அதிக உரம் கொடுத்து வந்தால் நல்ல பலனைக் காணலாம். இப்பொழுது தஞ்சை ஜில்லாவில் பல பிரதேசங்களில் நல்ல நீர்ப்பாசன வசதிகள் இருக்கின்றன. குறைந்த பட்சம் ஏகரா ஒன்றுக்கு 20 கலம் விளையும். ஆனால் 5 கலம் தான் காணப்படுகிறது. இன்றைய தினம் ரொம்பவும் மோசமான நிலைமையில் பயிரிட்டு வருகிறார்கள் என்றுதான் கூற வேண்டும். கண்டு முதல் மிகவும் குறைவு. விதை போடுவது அதிகம். தரிசுக் கூலி செலவும் அதிகம். உழைப்பும் வியர்த்தம். பசந்தாள் உரம் கிடைத்தால் கூடுமானவரையில் நல்ல பயிர் விளைவிக்கலாம். உரம் கிடைக்காத காரணத்தால்தான் அநேகம் இடங்களில் பயிர் நன்றாக விளையவே இல்லை. சில இடங்களில் உரம் போட்டாலும் அதற்குத் தகுந்த தண்ணீர் பாய்வது இல்லை. ஏனென்றால் சிலருக்கு இதை உபயோகிக்கத் தெரியவுமில்லை. எந்தக் காலத்தில் என்ன செய்யவேண்டும் என்றும், உரம் போடும் காலத்தில் உரம் போடுவதும் தண்ணீர் விடும் காலத்தில் தண்ணீர்

[Sri P. Venkatesha Sholagar] [24th December 1953

பாய்ச்சுவதும் அவர்களுக்கு சரிவர தெரிவதில்லை. எந்தெந்த சமயத்தில் என்ன செய்ய வேண்டும் என்று தெரிவதில்லை. வானிலை ஆராய்ச்சியாளர்களின் முடிவுகளை அப்போதைக்கப்போது விவசாயிகள் புரிந்து கொள்ளும்படி செய்ய வேண்டும். மழை பெய்யாவிட்டால்தான் உரம் போட வேண்டும் என்று நினைக்கிறார்கள். அப்படிப் போட்டுவிட்டால் உரத்தையெல்லாம் மழைத் தண்ணீர் அடித்துக்கொண்டுபோய் விடுகிறது. ஆகவே மாணவர்களுக்கு பாட புத்தகங்களிலும் பள்ளிக்கூடங்களில் அவைகளைக் கற்றுக் கொடுக்க வேண்டும். இப்போழுது மற்ற எல்லா காரியங்களுக்கும் நூதன சாதனங்களைக் கொண்டு விளம்பரம் செய்து வருகிறார்கள். அதைப் போலவே இதற்கும் செய்ய வேண்டும். காலையில் நாலு மணிக்கு வெளியில் போனால் அப்பொழுது ரேடியோ பாடுவதைக் கேட்கிறோம். அவைகளில் ஏதோ பாடுகின்றனர் நாம் கேட்கிறோம். அது நமக்கு ஒன்றும் புரிய வில்லை. அதிகாலையில் விவசாயிகள் சாகுபடி செய்யப் போகும்போது இந்த ரேடியோக்கள் மூலமாக அவர்களுக்கு எப்படி வெள்ளாமை செய்வது உரம் போடுவது முதலியவைகளைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். எப்படி சாகுபடி செய்ய வேண்டும், எந்தெந்த உரங்களை உபயோகப்படுத்த வேண்டும், எந்தெந்த யந்திரங்களை உபயோகப்படுத்த வேண்டும் என்பதை யெல்லாம் கற்றுக்கொடுத்து அவைகளை ஜாக்கிரதையாக செய்யச் சொல்ல வேண்டும். வானிலை ஆராய்ச்சியாளர்கள் சொல்வதைப் பொருத்து, சமயம் அறிந்து உரம் தெளித்து பலன் அடையலாம்.

"மழை பெய்யும் போது உரம் போட்டால் உரம் மழையில் அடித்துக் கொண்டு போய்விடும் என்கிற ஐயம் வேண்டியதில்லை. 24 மணி நேரத்தில் பிரயோசனம் வந்து விடும் ஆகவே விவசாயிகளுக்கு காலையில் அதை ரேடியோ மூலமாக பிரசாரம் செய்யலாம். இதை பெரிய அளவில் சினிமாப்படங்களைக் கொண்டும் காட்ட வேண்டும்.

"நீரிலும் நன்றதன் காப்பு" என்பதில் அர்த்தம் இருக்கிறது. உழுது உரம் போட்டு தண்ணீர் விட்டு வெள்ளாமை செய்ய வேண்டும். பயிருக்கு நோய்கள் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தீங்கு வராமல் காபந்து செய்யவேண்டும். மாடு மேயாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பயிர் வெள்ளத்தில் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் பல விவசாயிகள் விதைகளை நட்டு விட்டு அறுவடை காலத்தில் தான் பயிரைப் போய் பார்க்கிறார்கள். தண்ணீர் ஒரு பக்கத்தில் இல்லாமல் காய்ந்து கொண்டிருக்கும். மற்றொரு பக்கத்தில் வெள்ளத்தினால் பயிர் தண்ணீரில் அமுங்கிப் போய்க் கொண்டிருக்கும். அதனால் ஒரு பலனையும் அடைய முடியாது. இவ்விதம் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பார்கள். ஆகையால் பிரசாரத்தின் மூலமாகவும் சினிமாப் படங்கள் மூலமாகவும் விவசாயத்தை முன்னுக்குக் கொண்டு வர வேண்டும். அப்படிச் செய்தால் நிச்சயமாக விவசாயிகள் தங்களுடைய கடமையை சரியாக உணந்து தங்களுடைய கடமையைச் செய்வார்கள். அவர்கள் பிரசாரத்தினால் பலனடையக்கூடிய பல விஷயங்களை நாம் விளக்க முடியும். இப்பொழுது தஞ்சை ஜில்லாவில் அதிகாரிகள் கூட்டம் போட்டு தேசீய அபிவிருத்தி திட்டங்களைக் கொண்டு வருவதற்கு யோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். இதை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில் அங்கு கொஞ்சம் இதற்கு பசும்தாள் உரம் பயிர் செய்ய வேண்டும். இந்த விதைகளை இனாமாக கொடுக்க வேண்டும். அதன் மூலம் அதிகமான பசுந்தாள் உற்பத்தி செய்யலாம். ஒரு பழமொழி உண்டு மார்கழி மாத பஞ்சம் மக்களை விற்று தின்னும் பஞ்ச மென்றும் சொல்வார்கள். மார்கழி மாதம்தான் விவசாயிகளுக்கு பஞ்ச காலம். அப்பொழுது அவர்கள் தங்களுடைய ஆட்டையும் மாட்டையும் விற்று தங்களுடைய பஞ்சத்தைப். போக்கிக கொள்ளுவார்கள். அவர்கள் மிகவும் கஷ்ட நிலைமையில் இருப்பார்கள். அந்நிலை அவர்களுக்கு விதை வாங்கக் கூட முடியாமல் சக்தி அற்று இருக்கும் நிலையாகும். ஆகவே இந்த விதைகளை அதிக விலைக்கு வாங்கி குறைந்த விலைக்கு விவசாயிகளுக்கு விற்க வேண்டும். இப்பொழுது சர்க்கார் பல காரியங்களுக்கு மான்யம் கொடுத்து வருவது போல் இதையும் செய்து கொடுக்க வேண்டும். சாதாரணமாக மத்திய தர விவசாயிகளாக இருந்தால் அதிக விலைக்கு வாங்கி குறைந்த விலைக்கும் கொடுக்க வேண்டும்.

24th December 1953] [Sri P. Venkatesha Sholagar]

ஒரு ஏக்கருக்கும் கீழ் நிலம் வைத்திருப்பவர்களாகவும் ஏழை விவசாயிகளாகவும் இருந்தால் அவர்களுக்கு இனுமாகக் கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுத்தால்தான் ஜனங்கள் அந்த விதையை காலத்தில் வாங்கி உபயோகிக்க முடியும். முதல் வருஷத்தில் அவர்களுக்கு இனுமாகக் கொடுத்தால் அதன் பயனை கண்டுகொண்டு அடுத்த வருஷம் அவர்களாகவே அதை வாங்கி உபயோகிக்க முன் வருவார்கள். இந்த அளவில் காலாகாலத்தில் அவர்களுக்கு விதைகளை வாங்கிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த உதவியை அரசாங்கம் செய்யவேண்டும்.

"பூச்சி மருந்து வழங்கப்படுகிறது. இப்பொழுது அந்த மருந்துகளை ஏழைகள் உபயோகிப்பது இல்லை. நேற்றைய தினம் ஒரு கேள்வி கேட்டதற்கு கூட 25 சத விகிதத்திலிருந்து 50 சத விகிதத்திற்கு மானியம் உயர்த்தி இருக்கிறோம் என்று சொன்னார்கள். இந்த மருந்துகளையும் ஏழைகள் வாங்குவது கிடையாது. ஏனென்றால் அதை உபயோகிப்பதற்கு அவர்களுக்கு தெரியாது. அதில் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அதனால் அவர்களுக்கு கொஞ்ச காலம் பூச்சி மருந்தை இனுமாகக் கொடுக்க வேண்டும். அதன் அனுபவம் கண்ட பிறகு அவர்களே அவைகளை வாங்க முன் வருவார்கள். அதனால் இன்னும் சிறிது காலத்திற்கு அவர்களுக்கு இனுமாகக் கொடுக்கவேண்டும். ரசாயன உரம் எப்படிப் போடுவது என்பதை கண்டு கொண்ட பிறகு அவர்களே காசுகொடுத்து வாங்க முன் வருவார்கள். சிறிய விவசாயிகளுக்கு இந்த பூச்சி கொல்லும் மருந்தை இனுமாகக் கொடுக்கவேண்டும். அதன்படி விவசாயத்தை அபிவிருத்தி செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். தக்காளி கடன் ரூபாய் 100 வாங்குவதற்குள் ரூபாய் 25 செலவாகிறது. இப்பொழுது அவைகளை நீண்ட காலம் கடந்து கொடுக்கிறார்கள். கடன் சாங்ஷன் ஆன பிறகு பணம் வாங்கும்போது பட்டா மணியத்தின் கையெழுத்து வேண்டும் என்று கேட்கிறார்கள். கடன் சாங்ஷன் ஆகி பணம் வாங்கும்போது மறுபடியும் கையெழுத்து வேண்டும் என்று கேட்கிறார்கள். என்னைக் கூட இப்படி கேட்டார்கள். என்னைக்கூட அவர்களுக்கு தெரியாதா? என்னைத் தெரியாதவர்கள் அந்த ஜில்லாவில் மிகக் குறைவு. நிலைமை இப்படி இருக்கும் போது மற்றவர்களெல்லாம் எப்படி வாங்க முடியும் என்பதை கவனிக்க வேண்டும். அன்று அங்கு வந்த ஜில்லா அதிகாரி கூட என்னை அவருக்கு தெரியுமென்று கூறியும் பட்டா மணியகார் கையெழுத்து வேண்டும் என்று பிடிவாதம் செய்துவிட்டார். சம்பந்தப்பட்ட தாலூகா அதிகாரி இரண்டு முறை கையெழுத்து வாங்கவேண்டும் என்று இருப்பதை எடுத்து விடவேண்டும். இது நிலைமை மிகவும் மோசமாய் இருக்கிறது.

"கடன் பெரும் விஷயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அவ்விதம் எடுத்துக் கொண்டு விவசாயத்தைப் பெருக்குவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கிறேன்."

* THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Mr. Speaker, Sir, I am indeed obliged to you and the House for getting this important Demand reached for discussion. I am very happy that several hon. Members who spoke from both sides of the House made very constructive, helpful and friendly criticisms. I must admit that I have been considerably educated and profited by the very valuable suggestions and remarks made by these hon. Members who took part in the discussion. 3-54 p.m.

" Sir, this Demand is for about Rs. 1,14,58,700 and that means that Agriculture would get about Rs. 1,00,00,000 and Fisheries about Rs. 15,00,000. I may, therefore, at the very outset briefly explain the various heads on which the Agriculture Department has been bestowing its attention in the matter of effecting agricultural improvements. They are : (1) Green manuring, (2) adequate dosage of artificial fertilizers, (3) economic nursery, (4) early raising

[Sri M. Bhaktavatsalam] [24th December 1953

of seedlings, (5) proper method of planting, (6) use of improved seeds and (7) timely prophylactic measures against pests and diseases. Due to want of time, I am just pointing out very briefly how the Department of Agriculture proposes to effect improvements in agriculture. The Department of Fisheries will bestow its attention on (1) intensive seed collection, (2) quick transport facilities, (3) improvement of indigenous craft and tackle, (4) salt subsidy for fish-curing, (5) deep-sea fishing and (6) fish preservation.

"I would like to confess to this House that when I took up this important portfolio, I almost started with a prejudice that the Agriculture Department had not been doing what it could. But now I must admit, even during this short period of my contact with the Department and the work done in the districts, that I have been impressed with the sense of earnestness and enthusiasm and efficiency that are exhibited by the officers of the Agriculture Department. It is true in spite of the Department having done so much, much more remains to be done and I myself have been anxious to effect a new drive in the department so that the officers of the Agriculture Department could get into greater and closer contact with the people and the ryots in the villages so that they can successfully persuade the ryots to adopt all improved methods of agriculture which would benefit not only the landholders and cultivators but the country as a whole. After a continuous drought of five or six years we have had abundant rains. But the agriculturist is always unfortunate and this year there has been a widespread attack of crops by pests and diseases. I have been told by the officers of the Agriculture Department that this is unprecedented in the annals of the Agriculture department. I may, however, inform hon. Members that all possible steps are being taken to stock insecticides at various Agricultural depots for supply to ryots at concessional rates and help them to check the incidence and further spread of the disease.

"Sir, an hon. Member pointed out rightly the need for more demonstrations and exhibitions. I do appreciate what he said, that these exhibitions should more often be conducted in rural areas where the ryots could see for themselves the improvements effected by the Department, rather than in urban areas. But I may tell hon. Members that it is not practicable to conduct exhibitions in every village. Exhibitions could be held only in important centres and that happen to be urban areas. I would rather invite hon. Members to come and see the work carried on at the various Research Stations and Demonstration Farms.

3-50 p.m. "Sir, I would like hon. Members to see the interesting researches that are being made and the very valuable results that are being obtained, so that they could serve as Honorary Propaganda Officers of the Agriculture Department and thus they could come into contact with the ryots in their constituencies and educate them on the improved methods of agriculture. In this way they could infuse a sense of confidence in the ryots in adopting these new methods that are advocated by our research workers. If hon. Members could not visit the various Research Stations, I would

24th December 1953] [Sri M. Bhaktavatsalam]

invite them to go and see the 'Agriculture Stall' that has been opened in the exhibition that was started by His Excellency the Governor yesterday at the Teynampet Congress grounds. They could see, to some extent, the research work that is being carried on by the Government.

"I am indeed very much obliged to the hon. Member from Nidamangalam for his very interesting and valuable suggestions. I see, he is not a mere Member of the Madras Legislative Assembly. He is a practical agriculturist. More than the officers of the Department who are experts, we do need the co-operation of practical agriculturists like the hon. Member from Nidamangalam. He suggested that for small holders, insecticides and manures should be distributed free of cost. But I would like to tell him that even if one is a poor ryot, he is a holder of some land. As against him, there are lakhs and lakhs of people who do not hold any property and, therefore, it is not fair that those few holders of land, however small holders they may be, should be given these things free of cost from which they stand to benefit. Of course, the Government have been extending all possible facilities and concessions in the matter of loans for agricultural improvement. The Government have taken a decision some time back, that they would be longer grant loans to bigger agriculturists who can afford to raise loans of their accord. It is now the accepted policy of the Government that they would grant loans only to petty holders who are not otherwise able to raise loans themselves for agricultural improvements.

"One hon. Member made a suggestion that the Department of Agriculture should come forward to help and enable the poor ryots in backward areas to find water facilities. Filter-points are installed in areas where the water table is favourable. Filter-points are not very costly. I have seen middle class agriculturists taking to Filter-points with enthusiasm and being satisfied with the result. But it is not practicable where the water table is very, very low. Still, I would consider the suggestion that some demonstration could be made by the Department in backward areas where the ryots are at their wit's end to find out whether they could have any water facility.

"Of course, several suggestions have been made regarding irrigation improvements. The Food Production Section which had been attending to small irrigation sources, particularly in the zamin areas, and which was kept under abeyance during the last year when aid from the Government of India was not forthcoming, has been revived with the aid that has been offered by the Government of India. I have no doubt that this Food Production Section would particularly attend to the improvement of various small tanks not only in zamin areas but also in ryotwari areas.

"One suggestion was made that wherever there are lands available for cultivation, either in the Mettur Project area or in the forest area the same should be assigned to the landless. Sir, the question of disposal of lands in the Mettur area is under the active consideration of the Government. I can assure hon. Members

[Sri M. Bhaktavatsalam] [24th December 1953

that the Government would go into all aspects of the question and will take a decision before long. Regarding forest areas, hon. Members will appreciate the need for not only conserving but also for increasing the forest wealth of our State where the forest wealth is very, very poor. When there is already a programme of afforestation, hon. Members will appreciate that it is not right on the part of the Government to assign such lands for cultivation. Of course, there are lands which could be assigned and that is being attended to.

" Sir, reference was made to the extensive area of lands available in the Athur taluk of Salem district. I was recently there and I had discussions with expert officers, representatives of the Legislature and others. I found that out of 97,000 acres of land that have to be reclaimed, about 40,000 acres could be easily reclaimed. I have been examining the question, how it could be reclaimed. I have also been anxiously examining the question of the formation of co-operative collective farming in every district, at least in every National Extension and Community Project area and I have no doubt that hon. Members will agree that it is definitely a sure solution, at least one of the solutions, for the burning and complicated question of Land Reform. Sir, the Government have also been examining the question whether they could have their own Research Demonstration Farm formed out of these lands. Still, there will be a lot of lands available and the question of assignment will be taken up as soon as the policy is decided regarding the disposal of this vast extent of land in Athur taluk.

" Particularly the hon. Member from Nidamangalam referred to the prejudice of the ryots against chemical manures. Another hon. Member pointed out that there was a possibility of adulteration of manure as it was in the hands of private merchants. Another hon. Member suggested that the ryots are not able to get proper advice in the matter of manuring their lands. Still, another hon. Member has suggested that the disposal of manures should be left in the hands of the Agriculture Department. On the other hand, there have been criticisms and I fully agree with them, that the Demonstrators and other officers of the Agriculture Department should not be burdened with this responsibility of selling manures. We are now proposing to relieve agricultural demonstrators from this responsibility of selling manures, and hand it over not only to co-operative societies but also to private firms. But I can assure hon. Members that demonstrators and other officers will give necessary advice to the ryots in the matter of application of manures.

" Then, Sir, the hon. Member from Ariyalur who moved the cut motion, said that there was a proposal to have a scheme of intensive cultivation in the Tanjore district and he suggested that it should be extended to the Tiruchirappalli district. The proposal that we have been examining in consultation with the Government of India and the Planning Commission is whether a special scheme could be devised to step up production in the Tanjore district which produces large quantities of rice in this State.

24th December 1953] [Sri M. Bhaktavatsalam]

"I may inform the House that at present as things stand the total production in Tanjore district is estimated to be about 5·6 lakhs of tons. I have been informed by the Director of Agriculture that merely by making some agricultural improvements without going in for extra irrigation works, for which also there is a possibility, the production could be easily stepped up by 30 per cent. That is why we are examining the question of taking up the entire Tanjore district under the National Extension Scheme, so that its agricultural output may be increased. I may assure hon. Members here that it does not mean that we would neglect other districts. I seek the co-operation of all hon. Members in our effort to increase the yield in every district by effecting the necessary agricultural improvements apart from launching of irrigation projects. I do hope that all hon. Members will lend their support in this drive of ours to step up our food production. 4 p.m.

"With these words may I request the hon. Member who moved the cut motion to withdraw his cut motion?"

SRI M. PALANIYANDI :—"கனம் விவசாய மந்திரி அவர்கள் விவசாயம் இந்த ராஜ்யத்தில் சரிவர நடைபெறுவதற்கான காரியங்களைச் செய்ய சர்க்கார் நடவடிக்கைகள் எடுக்கும் என்று உறுதி அளித்திருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் ஸ்ரீ கே. ஆர். விஸ்வநாதம் அவர்கள் சொன்னதுபோல் கிணறு மான்ய வசூலை ஒத்திவைக்கவேண்டுமென்ற பிரச்னை உடனடியாகக் கவனிக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வெட்டுப் பிரேரணையை வாபஸ் வாங்கிக்கொள்ளுகின்றேன்."

MR. SPEAKER :—"The cut motion was, by leave of the House, withdrawn."

* SRI K. VINAYAKAM :—"On a point of information, arising out of the reply given by the Hon. Minister for Agriculture requesting the hon. Members of the House belonging to the Opposition to visit the stalls in the Congress Exhibition belonging to the Agriculture Department, may I know from the Hon. Minister whether he would allot a separate day for all of us to go there and may I know whether he would explain the details to us?"

* THE HON. SRI M. BHAKTAVATSALAM :—"Sir, I invited not only hon. Members belonging to the Opposition but also hon. Members belonging to my side also. Let me assure hon. Members that the officers who have been posted in the stalls occupied of the Agriculture Department would give all necessary information to the hon. Members visiting the stalls. It is not possible for all the hon. Members to go to the exhibition the same day. Moreover the entrance fee is only five annas."

* SRI K. VINAYAKAM :—"It is not a question of money, Sir. We do not know the details exhibited there in the stalls. I only enquired whether all the details would be explained to us."

* THE HON. SRI M. BHAKTAVATSALAM :—"I assure the hon. Member that the officers whom we have posted will explain all the necessary details to the hon. Members who visit the stalls."

[24th December 1953

MR. SPEAKER :—" I will now put the main motion to the vote of the House. The question is—

' That the Government be granted a sum not exceeding Rs. 1,14,58,700 under Demand XVIII—Agriculture and Fisheries.' "

The Demand was put and carried and the Grant was made.

(7) DEMAND XXIII—LABOUR INCLUDING FACTORIES.

* THE HON. DR. U. KRISHNA RAO :—" Mr. Speaker, Sir, on the recommendation of the Governor I move—

' *That the Government be granted a sum not exceeding Rs.* 6,12,000 *under Demand XXIII—Labour including Factories.*' "

MR. SPEAKER :—" Motion moved—

' That the Government be granted a sum not exceeding Rs. 6,12,000 under Demand XXIII—Labour including Factories.' "

SRI K. P. GOPALAN :—" Sir, I move—

' *That the sum of Rs.* 6,12,000 *under Demand XXIII—Labour including Factories be reduced by Rs.* 100.'

I shall speak afterwards, Sir."

MR. SPEAKER :—" Motion moved—

' That the sum of Rs. 6,12,000 under Demand XXIII—Labour including Factories be reduced by Rs. 100.'

" This cut motion as well as the main motion is now before the House for discussion."

* SRI S. C. C. ANTHONY PILLAI :—" Mr. Speaker, Sir, while supporting the cut motion just moved, I wish that the cut motion be accepted by the House so that the present Labour Department may be scrapped for ever. Under the present policy of Government, the Department of Labour far from easing industrial tension has accentuated such kind of tensions and industrial disputes. No clear-cut announcement of the policy of the Government in respect of labour including factories has been made till now. That is the present state of affairs. Labour is being crushed now. It is not being treated properly.

" As early as 1947, the Government of India convened a tripartite conference. They invited representatives of State Governments, representatives of employers in industrial undertakings and representatives of employees in industrial establishments. At that conference a solemn promise was made and a concrete resolution was passed to the effect that industrial disputes should be settled by adjudication or arbitration. In pursuance of that resolution, it was agreed that both the Centre as well as the States would try their best to encourage the parties to settle their disputes by negotiation and where such a course failed to try to effect a

24th December 1953] [Sri S. C. C. Anthony Pillai]

compromise by conciliation and when all such methods failed to refer the disputes to Industrial Tribunals. How is the present Department of Labour headed by the Hon. Dr. U. Krishna Rao dealing with labour? How is Dr. Krishna Rao, ever since he took up office, implementing that resolution? Speaking a few months ago at a general body meeting of the South Indian Chamber of Commerce, the Chairman made some disparaging remarks about the policy of the Madras Government in referring disputes to industrial tribunals. The Chief Minister of this State immediately contradicted him and stated that it was the firm policy of the Government to encourage the settlement of disputes by compulsory arbitration. Again speaking of more recent times, the Prime Minister of India while speaking at a meeting of the Associated Chambers of Commerce in Calcutta reiterated the policy of the Government of India that industrial disputes should as far as possible be resolved by adjudication proceedings. But in spite of such utterances, what is the policy this Government is following? If only we analyse what this Department of Labour has done ever since the Hon. Dr. U. Krishna Rao took up office, we will clearly see that they had totally set aside the 'industrial truce' resolution enunciated at the tripartite conference convened by the Government of India in 1947, to which I had previously referred. Why is it that the Madras Government is not referring the disputes to adjudication? Why are they not implementing the industrial truce resolution? In fact, the present policy of Government in regard to labour leaves an open field to employers to stipulate their own conditions. What is it that the Government do whenever an industrial dispute is brought to their notice? They depute a Labour Officer to try to effect conciliation between the parties. The Conciliation Officer comes, tries to use his good offices to effect a compromise. After his enquiry and if he fails to effect a compromise, he makes his recommendation to the Government (I mean, the Development Department) stating that the dispute could not be settled and that the same could be referred to an industrial tribunal. But what is it that the Development Department does? They take this report as the basis and immediately send a letter to the union stating that inasmuch as the dispute could not be settled, the demands made by employees have no merit and are not justified. The chapter is thus closed by the Government. Where then is the door left open for further negotiation? Is this the way in which labour should be treated? Wherefrom is the voice of Government emanating? Apparently the voice of Dr. U. Krishna Rao is the voice of Mr. Lobo Prabhu, the Development Department Secretary, which clearly echoes the sentiments of the big-wigs of the Madras Chamber of Commerce meeting at the Gymkhana Club.

"I shall cite a specific instance. A dispute arose recently in Messrs. Parry & Co., Ltd. The workers demanded a reduction of hours of work. What is it that they wanted? They only demanded that a reduction in their working hours should be made in conformity with the *level* of the working hours in other commercial establishments. This was the modest demand of the workers. The employees served them a notice saying that they 4-10 p.m.

[Sri S. C. C. Anthony Pillai] [24th December 1953

would refuse to do overtime work. Faced with this ultimatum, the employees came round for a settlement that the hours of work should be approximately on a level obtaining in other commercial establishments in Madras. After this settlement was reached, comes the 'judicial' estimate of the Development Department Secretary that the demand of the employees is an unjust, unfair and unreasonable demand. That is the kind of judicial estimate by the Development Department which is presided over by the present Minister for Labour and which is interested only in the employers and not in the settlement of disputes.

"Sir, I want now a clear-cut enunciation of policy as to whether this Government intend to refer disputes to arbitration. If the position is made clear, I would welcome it; I am not the person to plead on bended knees for compulsory arbitration. But accepting compulsory arbitration and refusing to promote it is the type of attitude which favours the employer and not the employee. So let this Government announce that in such and such industries, in such and such categories of establishments, there will be no reference to adjudication proceedings and then not a single labour organization will approach this Ministry of Labour for any kind of advice. That is the only thing we want, namely, a clear statement of policy on behalf of the Government saying on which side they stand—with the employers or with the labourers.

"Let us take for instance, the recent speech made by the Hon. Dr. U. Krishna Rao in a conference of Labour Inspectors. I have never seen a statement which indicates such an amount of partiality for the employers. He tells his Inspectors of Factories, not to implement the Act and that they are only to find out whether the Act could be implemented, and he says, 'do not be harsh with the employer'. What does he mean by 'harsh ? It can only mean 'do not report employers who are violating the Act.' Again, the Hon. Dr. Krishna Rao instructs the Chief Commissioner of Labour who is the deciding authority, 'do not be harsh to the employers'. What does it mean, its means a clear, categorical advice, 'do not implement this Act'. That is why I say, Sir, it is better to do away with this Labour Department and this Development Department which are the watch dogs of the interests of the employers.

"The Hon. Dr. Krishna Rao does not seem to know the amount of embitterment that has been created in the whole labour movement. There may be no discrimination between the different trade unions. But so far as labour is concerned they are bitterly dissatisfied with the attitude of the Government. Therefore, the whole of the present Government machinery—their policies and practices and their administrative actions—the whole system of pretending to settle disputes and at the same time encouraging the employer to have his own way, should be abolished.

"Again, I shall state a simple instance. Regarding a dispute, adjudication proceedings took place; there was some doubt about the actual interpretation of the award. When it was taken to the

24th December 1953] [Sri S. C. C. Anthony Pillai]

Ministry of Labour, they said, 'approach the Tribunal which gave the award, for the purpose of clearing the ambiguity'. But the workers' union pointed out that the law requires that the ambiguity should be resolved through a reference made by Government to arbitration. But the Government cannot make up their mind whether it should be referred or not, whereas it is admitted there should be quick solution by means of arbitration. That is why, Sir, I plead on behalf of all organized labour that there should be a clear enunciation of policy on behalf of the Government stating on which side they stand—with the workers or the employers—and whether they want the Industrial Tribunals and their awards to be thrown on the scrap heap."

* SRI K. T. SREEDHARAN :—"Sir, I rise to speak in support of the cut motion.

